பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 14 வியாழக்கிழமை 30.11.2023 கதிர் 384

### மக்கள் ஆணை பெற்ற தலைவர் நாட்டுக்கு கிடைக்க

# ஜனாதிபதி, பொதுத் தேர்தலை ஒரேயடியாகவே நடத்துவோம்

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. வலியுறுத்து

ஜனாதிபதி தேர்தலையும், பொதுத்தேர்தலையும் ஒன்றாக நடத்துவோம். அதன் மூலம் மக்கள் ஆணை பெற்ற தலைவர் ஒருவர் நாட்டுக்கு கிடைப்பார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த ஆண்டு ஜனாதிபதி ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

கடைசியில் பெரமுன மற்றும் தேசியவாத சக்திகளிடம் ஜனாதிபதி மண்டியிட வேண்டியவராகிவிட்டார். பதில் பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை அவர் நியமனம் செய்துள்ளார். மனித உரிமைக் குற்றச்சாட்டுக்கள் இருப்பதன் காரணமாக அவரை பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கப் பின்னடித்து வந்த ஜனாதிபதி கடைசியில் தனது பிடிவாதத்தை விட்டுக்கொடுக்க வேண்டியவரானார்.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தேசபந்து தென்னக்கோனை பதில் பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கான இணக்கத்தை ரணில் வெளியிட்டார். இது தொடர்பான அறிவித்தலை பொது மக்கள் ☞ 2

## சாதாரண தர பெறுபேறுகள் 2 நாட்களில்

2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் இன்னும் இரண்டு நாட்களில் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம்ஜயந்த் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் பி.வை.ஜி.ரத்னசேகர எழுப்பிய வாய்மூலமான கேள்விக்குப் பதிலளிக்கும்போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்தும் ☞ 2

## வவுனியா - காங்கேசன்துறை இடையே ஒரு தொடருந்தை இயக்கக் கோரிக்கை

### சித்தார்த்தன் எம்.பி. நாடாளுமன்றத்தில் விடுத்தார்

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு காலையிலே யாழ்.ராணி என்ற ஒரு தொடருந்து உத்தியோகத்தர்களுக்காக விடப்படுகின்றது. அது மிகவும் உபயோகமாக இருக்கின்றது. அதேபோல வவுனியாவிலிருந்து காங்கேசன்துறைக்கு ஒரு தொடருந்து ஓடுமாக இருந்தால், அது நிச்சயமாக வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் போகின்ற கிளிநொச்சி உள்ளிட்ட பகுதிகளுக்குப் போகின்ற உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் உதவியாக இருக்கும் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். ஏபி.சி போட்ட வீதிகளை கட்டாயமாக எவ்வளவு விரைவாக முக்கியமாக காரைநகர் வீதி. காரைநகர் வீதி பகுதியிலே பல தூரம் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலைமை இருக்கின்றது. ஏறக்குறைய வடக்கம்பரை அம்மன்கோயிலுக்கு அப்பால் பள்ளங்கள் தொகையாக இருந்து கொண்டிருக்கினறது. அதை முடித்துக்கொடுக்க வேண்டும்.

அதேபோல புத்தூர் வீதியில்கூட செய்யப்பட்ட வீதிகள் பல இப்போது பழுதாகிக்கொண்டு வருகின்றது ஏனென்றால் கார்ப்பட் போடப்படாத படியால் தான். இவைகளை செய்ய வேண்டுமென நான் அமைச்சரைத் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்ததாக, யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு காலையிலே யாழ்.ராணி என்ற ஒரு தொடருந்து உத்தியோகத்தர்களுக்காக விடப்படுகின்றது. அது மிகவும் உபயோகமாக இருக்கின்றது. ☞ 2

## நாடாளுமன்றக் கட்டடக் கலையை பாதுகாக்கும் நடவடிக்கை ஆரம்பம்

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பெறுமதிமிக்க கட்டடக் கலையைப் பாதுகாக்கும் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இலங்கை நாடாளுமன்றத்தின் முன்மொழிவுக்கு அமைய இடம்பெறவுள்ள இந்தத் திட்டம் தொடர்பான ஆரம்ப கட்டக் கலந்துரையாடலில் பல நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பெறுமதிமிக்க கட்டட வடிவமைப்பில் காணப்படும் கலாசார அடையாளங்கள், இயற்கை நிலக்காட்சி மற்றும் சூழல், வரலாற்று ரீதியாகப் பொருந்தும் சூழல், தேசிய அடையாளம் ஆகியவற்றின் காரணமாக, எதிர்கால சந்ததியினருக்காக அவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் இங்கு வலியுறுத்தப்பட்டது.

படைப்பாளர்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்குவதுடன், அவர்களின் பதிப்புரிமையை பாதுகாப்பது மற்றும் கட்டடக்கலை, கலை மதிப்பக்கள் அழியாமல் பாதுகாப்பது இதன் நோக்கமாகும்.

இந்தக் கலந்துரையாடலில் பௌத்த மத மற்றும் கலாசார விவகார அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களம், தேசிய அருங்காட்சியகத் திணைக்களம், மத்திய கலாசார நிதியம், தொல்பொருள் திணைக்களம், தேசிய கலைச் சபை, அரசாங்கத் தகவல் திணைக்களம், ஈனா டி சில்வா ☞ 9

## பொருளாதாரப் பிரச்சினையைத் தீராது சர்வதேச நம்பிக்கையை பெறமுடியாது

### இந்திய கொள்கை வகுப்பாளர் கருத்து

பொருளாதாரப் பிரச்சினையை தீர்க்காது விட்டால் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியாதென இந்திய கொள்கை வகுப்பு ஆணைக் குழுவின் முன்னாள் பிரதி தவிசாளர் மென்டெக்சிங் அலுவாலியா தெரிவித்தார்.

இலங்கைக்கு வந்துள்ள அவர் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை அவரது அலுவலகத்தில் சந்தித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நேரத்தில் தேவைப்படுவது மிகப் பெரும் பொருளாதார சமநிலையாகும். பொருளாதார நிலைமைகள் எதிர்மறையாக இருக்கும்போது பொருளாதர ஸ்திர நிலைமை சம்பந்தமான உரையாடலை உருவாக்குவது தொடர்பில் எந்த ஆய்வாளரும் சாதகமாகக் கூறுவதில்லை. அதுதான் இலங்கையின் பிரச்சினையாகும்.

இலங்கையில் அதிகளவான ☞ 9

## ராஜபக்ஷக்களையோ கட்சியையோ அழிக்க முடியாது; மீண்டு வருவோம்

### பெரமுன எம்.பி. விமலவீர தெரிவிப்பு

ராஜபக்ஷக்களையோ, பொது ஜன பெரமுனவையோ அழிக்க முடியாதென அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

டிசெம்பர் 15 சுகததாச உள்ளக அரங்கில் எமது கட்சியின் மாநாடு நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டில் எமது ஆதரவாளர்களால் அரங்கத்தை நிறைக்கவுள்ளோம்.

தற்போதைய சூழலில் எம்மால் காலி முகத்திடலையும் ஆதரவாளர்களால் நிறைப்பதற்கு முடியும். ஆனால் மழைகாலம் என்பதால் நாம் ☞ 2

## சவூதி நிதியத்தால் இலங்கைக்கு தரப்பட்ட பணம் தொடர்கிறது

### அமைச்சர் பந்துல நாடாளுமன்றில் தெரிவிப்பு

எமது நாட்டுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட ஏனைய நாடுகளின் நிதியங்கள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளபோதும் சவூதி நிதியத்தால் எமக்கு கிடைத்துவந்த பணம் நிறுத்தப்படாமல் கிடைத்து வருகிறதென அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு ஆகியவற்றுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீது நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழுநிலை ☞ 8

## ஜனாதிபதி பொய் சொல்கிறார்: மரிக்கார் எம்.பி. கொந்தளிப்பு

கொழும்பு மாவட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள 50 ஆயிரம் குடியிருப்புகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ள விடயம் முற்றிலும் பொய்யானதென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024ஆம்ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சு ஆகிய அமைச்சுக்களுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு ☞ 2

## கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை தயார்

### அமெரிக்கத் தூதர் கருத்து

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பான இலங்கையின் உடன்படிக்கை குறித்து மகிழ்ச்சியடைவதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டரில் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது,

கடன் மறுசீரமைப்பு மற்றும் உறுதியான பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான உடன்படிக்கையானது சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த தவணையை சரியான நேரத்தில் வெளியிடுவதற்கு முக்கியமானது. இது இலங்கை மக்களுக்கு நன்மையளிக்கும் தொடர்ச்சியான பொருளாதார ஸ்திரப்படுத்தல் ☞ 2

## அடுத்த தேர்தலில் ராஜபக்ஷக்கள் மக்களின் பக்கமே நிற்பார்களாம்

### மகிந்த தெரிவிப்பு

அடுத்த தேர்தலில் நாம் மக்களின் பக்கம் நிற்போம் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அநுராதபுரத்துக்கு நேற்று வருகை தந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜயஸ்ரீ மகாபோதிக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

ரொஷான் ரணசிங்வின் பதவி விலகல் தொடர்பில் குறிப்பிடுகையில், "வருவார்கள் போவார்கள். அதனைப் பெரிதாகக் கொள்ளவேண் டியதில்லை" என்றார்.

பின்னர், சரியான முறையில் ☞ 9

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஊடகங்களுக்கு வெளியிட்டார்.

7 மாதங்களுக்கு முன்னரும் தென்னக்கோனை பொலிஸ் மா அதிபர் பதவிக்கு நியமிக்க நடவடிக்கைஎடுக்கப்பட்டபோதுகடும் எதிர்ப்புக் கிளம்பியது. இப்போதும் அதுபோன்ற கடுமையான எதிர்ப்புக் கிளம்பும் என்று எதிர்பார்க்கலாம். அதனைச் சமாளிப்பதற்காகவே அவருக்கு நேரடியாக பொலிஸ் மா அதிபர் பதவியைக் கொடுக்காமல் பதில் பொலிஸ் மா அதிபர் பதவி கொடுக்கப்பட்டிருக்கின்றது. எதிர்ப்புக்கள் அடங்கியதும் அவரை நிரந்தர பொலிஸ் மா அதிபராக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள்.

பதில் பொலிஸ் மா அதிபர் நியமனம் கிடைத்ததைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய தென்னக்கோன் தெரிவித்ததாவது:

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே எனது முதல் இலக்கு. அத்துடன் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், கப்பம் கோருதல் ஆகியவற்றினால் ஏற்படும் அச்சுறுத்தல் தொடர்பில் செயற்பட எதிர்பார்த்துள்ளேன்.

நான் சமார் 25 வருடங்களாக வெவ்வேறு பொலிஸ் பதவிகளில் கடமையாற்றியுள்ளேன். எனக்கு அனுபவம் உள்ளது. நாட்டுமக்களின் நலனுக்காக இலங்கை பொலிஸ் சேவையை முன்னோக்கி கொண்டு செல்வேன்.

நாடளாவிய ரீதியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்த நான் முன்னுரிமை அளிப்பேன். அத்தோடு அதனை மேற்கொள்ள சிறந்த திட்டமும் என்னிடம் உள்ளது. அதை செயல்படுத்துவேன் என்று நம்புகிறேன்.

அத்துடன் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், கப்பம் கோரல் ஆகியவற்றினால் ஏற்படும் அச்சுறுத்தல் தொடர்பில் செயற்பட எதிர்பார்க்கின்றோம்.

நான் பொறுப்பில் இருந்த சந்தர்ப்பங்களில் எவ்வாறு செயற்பட்டேன் என்பதை அனைவரும் நன்கு அறிவர் என்றார்.

அவரது கருத்துக்கள் அவர் தனது சேவைப் பாணியிலிருந்து மாறப்போவதில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. இது மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் கடும் எதிர்ப்பைச் மீண்டும் கிளப்பும் என்று எதிர்பார்க்கலாம். ஜனாதிபதி இந்த எதிர்ப்பை எப்படிச் சமாளிக்கப்போகிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜனாதிபதி,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் நடத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட மாட்டார் என்று சிலர் கூறுகின்றார்கள். எமக்கு அவர் போட்டியிடுவதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. எம்மைப்பொறுத்தவரையில் ஜனாதிபதி, நாடாளுமன்றம் ஆகிய இருவகைத் தேர்தலையும் ஒன்றாக நடத்துமாறே கோருகின்றோம்.

ரணில் விக்கிரமசிங்க தனித்துப் போட்டியிட்டாலும் சரி, பொது ஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட்டாலும் சரி தோற்கடிக்கப்படுவார். ஆகவே ஜனாதிபதி தேர்தலையும், பொதுத் தேர்தலையும் ஒன்றாக நடத்துவோம். அதன் மூலம் மக்கள் ஆணை பெற்ற தலைவர் ஒருவர் நாட்டுக்கு கிடைப்பார். தற்போது அதுவே மக்களின் கோரிக்கையாகவுள்ளது.

மக்களின் ஆணைபெற்ற தலைர் இன்மையால் நாடு ஏதேச்சதிகாரம் நோக்கிச் செல்கின்றது. அதனை மக்கள் ஆணைபெற்றவர்களிடத்தில் ஒப்படைக்கவேண்டும். நிலைமைகளை மாற்றியமைக்க வேணடும் என்றார்.

## ராஜபக்ஷக்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலி முகத்திடலைக் கைவிட்டோம். உள்ளக அரங்கினை தெரிவு செய்தோம்.

இதேவேளை, காலி முகத்திடல் போராட்டகாரர்களால் எமது கட்சி சவப்பெட்டிக்குள் வைத்து ஆணி அடிக்கப்பட்டதாக பலர் கருதினர். பொது ஜன பெரமுனவையோ, ராஜபக் ஷக்களையோ அழிக்க முடியாது.

நாம் மீண்டும் எழுந்து வருவோம். டிசெம்பர் 15 அது முழு நாட்டுக்கும் வெளிப்படுத்தப்படும் எனினும், ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று அன்றைய தினம் அறிவிப்பது பற்றி தீர்மானிக்கப்படவில்லை என்றார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பல கற்பனை கதைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். கொழும்பு மாவட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள தொடர்மாடி குடியிருப்பில் உள்ள 50 ஆயிரம் குடியிருப்பாளர்களுக்கு வீட்டு உறுதிப்பத்திரம் வழங்குவதாக குறிப்பிட்டுள்ளார். இது முற்றிலும் பொய்யானது. தனது சகாக்களுக்காக வழங்கப்பட்டுள்ள அரசியல் வாக்குறுதி.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் 50 ஆயிரம் வீடுகள் இல்லை. 14,512 வீடுகள் மாத்திரமே உள்ளன. மீதுன்செவன குடியிருப்புத் திட்டத்தில் 500 குடியிருப்புகளும், லக்முதுசெவன குடியிருப்பு திட்டத்தில் 118 குடியிருப்புகளும், மெதத்செவன குடியிருப்புத் திட்டத்தில் 430 குடியிருப்புகளும் உள்ளடங்களாக 24 குடியிருப்பு செயற்திட்டத்தில் 14,512 குடியிருப்புகள் உள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ வழங்கியுள்ள குடியிருப்புகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்க முடியாது, ஏனெனில் உரிய காணிகளுக்கு முதல் உரிமையாளர் இல்லாத நிலையில் உறுதிப்பத்திரம் வழங்க முடியாது. இதுவே உண்மை.

50 ஆயிரம் பேருக்கு வீட்டு உறுதிப்பத்திரம் வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டவுடன் மாளிகாவத்தை தொடர்மாடி குடியிருப்பு தொகுதிக்குச் சென்றேன். அப்பகுதியில் உள்ளவர்கள் சுமார் 30 வருடகாலமாக வாடகை மற்றும் வரி செலுத்தி உறுதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டுள்ளார்கள். ஒருசிலர் இரண்டாம் தர உரிமையாளர்களாக உள்ளார்கள்.

புதிய குடியிருப்பு தொகுதிகளை நிர்மாணிப்பதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் கொழும்பு மாவட்டத்தில் பெருமளவான வீட்டுதொகுதி திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆகவே ஜனாதிபதியின் வாக்குறுதிகள் நடைமுறைக்கு சாத்தியமற்றதாக உள்ளது.

கற்பனை கதைகளை அழகாக குறிப்பிடுவதில் ஜனாதிபதி திறமையானவர் என்பதை பொதுஜன பெரமுனவினர் அறியாமல் இருக்கலாம், நாங்கள் நன்கு அறிவோம். கொழும்பு மாவட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள 14,512 குடியிருப்புகளில் பதிவு செய்யப்பட்ட 12,360 பேருக்கு குடியிருப்பு உறுதிப்பத்திரம் வழங்குவதாக இருந்தால் அதற்கு இருகைகளையும் உயர்த்தி ஆதரவு வழங்குவோம்.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களுக்கு எம்மை காட்டிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே கடன்பட்டுள்ளார். பொய்யான வாக்குறுதிகளை வழங்கி அவர்களை தொடர்ந்து அவர் ஏமாற்றினார். அதற்கான பாடத்தை கொழும்பு மாவட்ட மக்கள் 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் கற்பித்தார்கள்.

மக்களால் புறக்கணிக்கப்பட்ட சாகல ரத்நாயக்க, ரவி கருணாநாயக்க ஆகியோர் மீண்டும் அரசியலுக்கு வருவதற்கு 50 ஆயிரம் பேருக்கு குடியிருப்பு உரிமை வழங்குவதாக பொய்யான வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. சாகல ரத்நாயக்க, ரவி கருணாநாயக்க ஆகியோர் முடிந்தால் எம்முடன் போட்டி போட்டு தேர்தலில் வெற்றியடையட்டும் என்றார்.

## கடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்சி மற்றும் பொது சேவைகளை மேம்படுத்துவதற்கு தேவையான நிதி உதவியை வழங்கும். இது இலங்கையின் பொருளாதார ஸ்திரதன்மைக்கான சாத்தியமான பாதையை உருவாக்குகின்றது. இலங்கையின் பேண்தகு மீட்பிற்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளது என்றுள்ளது.

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோல வவுனியாவிலிருந்து காங்கேசன்துறைக்கு ஒரு தொடருந்து ஓடுமாக இருந்தால், அது நிச்சயமாக வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் போகின்ற கிளிநொச்சி உள்ளிட்ட பகுதிகளுக்குப் போகின்ற உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் உதவியாக இருக்கும். அவர்கள் காலையில் சென்று யாழ்ப்பாணத்தில் அலுவல்களை முடித்துவிட்டு பின்னேரம் வரக்கூடியதாக இருக்கும். ஆகவே இந்த தொடருந்தையும் இயக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்தால் அது நிச்சயமாக பலருக்கு உதவியாக இருக்கும். அதை கட்டாயமாக செய்யவேண்டும் என்று நான் தாழ்மையாகக் கேட்கின்றேன்.

அதேபோல் காங்கேசன் துறைக்காக செல்லுகின்ற உத்தர தேவி தொடருந்து காலை 11.50ற்குச் செல்லுகின்றது. அதில் இரண்டாம் வகுப்புக்கு பலர் டிக்கெட் எடுக்கின்றார்கள், தெரியாமல் டிக்கெட் எடுத்துவிடுகிறார்கள். அங்கு இரண்டாம் வகுப்புக்கான கொம்பார்ட்மெண்ட் இல்லை. ஆகவே அவர்கள் மூன்றாம் வகுப்புக்கு செல்லுமாறு பணிக்கப்படுகிறார்கள்.

அவர்கள் மூன்றாம் வகுப்பில் போகின்றபோது அவர்கள் ஏறக்குறைய 300 முதல் 400ரூபா அதிகமாக செலவழித்திருக்கின்றார்கள். இந்நிலையமையைப் பார்த்து அவர்களுக்கு இரண்டாம் வகுப்புக்கான கொம்பார்ட்மெண்டை போடுவதற்கு முயற்சிக்க வேண்டும். அத்துடன் யாழ்ப்பாணம் புகையிரதம் அதாவது காங்கேசன்துறை கொழும்பு கோட்டை இரவு தபால் தொடருந்தில் கடந்த காலங்களில் பேர்த் இருந்திருக்கின்றது.

அந்த பேர்த் சுகயீனகார்களுக்கு, வைத்தியசேவைக்காக கொழும்புக்கு வர இருப்பவர்கள் வயோதிபர்கள் இவர்களெல்லாம் சௌக்கியமாக பயணம் செய்வதற்கு அந்த பேர்த் உதவியாக இருந்திருக்கின்றது.

அந்த பேர்த் கொம்பார்ட்மெண்டையும் போடுவது ஒரு மிக முக்கியமான விடயமாகவே நான் பார்க்கின்றேன். இதைச் செய்யவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களை தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேபோல் மன்னாருக்கு செலலுகின்ற தொடருந்திலே ஏ.சி. கொம்பார்ட்மெண்ட் போடுவதற்கான ஒரு முயற்சியையும் எடுக்கவேண்டும். ஏனென்றால் அங்கு பயணம் செய்பவர்களுக்கும் ஏ.சி. இல்லாமல் செல்வது கடினமாக இருக்கின்றது.

அதேபோல இந்த மோட்டார் சைக்கிள்களைக் கொண்டுவந்து தொடருந்து நிலையத்திற்கு பக்கத்தில், பஸ்ஸ்டாண்டுக்குப் பக்கத்தில் விடுகிறார்கள். வருகின்றபோது பார்த்தால் தெரியும். வவுனியாவிலேகூட அந்த பஸ் ஸ்டாண்டுக்கு அருகிலே ஒரு தொகை மோட்டார் சைக்கிள்கள் பார்க் பண்ணப்பட்டிருக்கும்.

பயணிகள் எல்லாம் காலையில் வந்து மோட்டார் சைக்கிள்களை அங்கு விட்டுவிட்டு பஸ் எடுத்து தூர இடங்களுக்குச் செல்பவர்கள். அங்கு சைக்கிள் பார்க் இல்லை. ஆகவே, பெரிய பெரிய ஸ்டேசன்கள் பஸ் ஸ்டாண்களுக்குப் பக்கத்தில் ஒரு இடம் எடுத்து சைக்கிள் பார்க் போட்டுக் கொடுத்தால் இந்த மோட்டார் சைக்கிள்கள் பாதுகாப்பாக இருக்கும். மழை வெய்யிலும் பாதுகாப்பாகவும் இருக்கும். மற்றையபடி களவுகளில் இருந்தும் பாதுகாப்பாக இருக்கும். அதையும் அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று நான் தாழ்மையாகக் கேட்கின்றேன்.

அடுத்தது நகர அபிவிருத்தி அதிகார சபையின் நகர அபிவிருத்தி விடயமாக வடமாகாணப் பணிப்பாளர் சமன் திஸாநாயக்கவை நானும், முன்னைநாள் வலிதெற்கு பிரதேசசபைத் தவிசாளர் தர்சனும் சந்தித்து இதுபற்றி கதைத்திருக்கின்றோம். இருந்தாலும் நான் இதை இதிலேயும் கூறுவது நல்லதென நினைக்கின்றேன்.

22ஆம் ஆண்டு வந்த ஒரு வர்த்தமானியின் படி குடாநாட்டிலே இருக்கக்கூடிய பதினேழு சபைகளும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குள் கொண்டுவந்திருக்கின்றபோது இந்த கிராமப்புறங்களிலே அது ஒரு மிக பயத்தையும் பிரச்சினையையும் மக்களுக்குக் கொடுக்கின்றது. உதாரணமாக என்னுடைய கிராமமானகந்தரோடை முழுவதுமே ஏறக்குறைய சுன்னாகத்திலிருந்து அவ்வளவு இடமும் அந்த நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குள்ளே கிறீன் சோன் ஆக வரைந்து காட்டியுள்ளார்கள்.

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளபோது அங்கிருக்கின்ற மக்கள் ஒரு மதில் கட்டுவதற்குக்கூட முடியாமல் மிகவும் அந்தரப்பட்டு என்னிடம் வந்து முறையிட்டார்கள். அதன் பிறகுதான் நான் பணிப்பாளரைச் சந்தித்து கதைத்தேன். அவர் சொன்னார், அதிலே ஒரு சின்னப் பிரச்சினை இருக்கிறது.

நாங்கள் எல்லாருமாக மீண்டும் இதை அமுல்நடத்துகின்றபோது அந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் இப்படியானவர்கள், முன்னைநாள் தவிசாளர்கள் என இவர்கள் அனைவரையும் கூப்பிட்டு அதைச் செய்வது நல்லது அல்லது முக்கியமாக யாழ்ப்பாணத்தையும் நல்லூரையும் எடுத்துக்கொண்டால் அது நிச்சயமாக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குள் வரலாம்.

சுன்னாகம், சங்கானை இப்படியான இடங்களை மாத்திரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஆதிக்கத்துக்குள் கொண்டுவருவது நல்லது மற்றைய இடங்களை எப்படி பிரதேச சபைகள் பார்த்தனவோ அதே மாதிரிப் பார்த்துக்கொள்ளலாம். அதேநேரம் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திகாந்தனுக்கு ஒன்றைச் சொல்லி முடிக்கின்றேன். அவர் உண்மையாகவே நினைக்கின்றார் தான் கிழக்கு மாகாணத்தினுடைய அமைச்சர் என்று, இல்லை அவர் இலங்கை முழுவதுக்குமான அமைச்சர், நாங்கள் அப்படித்தான் அவரைப் பார்க்கின்றோம். வடக்கையும் அங்கிருக்கக்கூடிய வீதிகளையும் கிராம வீதிகளையும் கவனிக்க வெண்டுமென அவரை நான் இச்சபையில் வைத்து கேட்கிறேன் என்றார்.

## சாதாரண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

பரீட்சை பெறுபேறுகள் தயாரிக்கும் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளன. எதிர்காலத்தில் குறிப்பிட்ட திகதியில் பரீட்சைகள் நடத்தப்பட்டு, குறிப்பிட்ட திகதியில் பெறுபேறுகளை வெளியிடவுள்ளோம். புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ், இந்த மதிப்பீட்டுச் செயல்பாட்டில் சில மாற்றங்களை ஏற்படுத்தி, அவற்றை விரைவுபடுத்த எதிர்பார்க்கவுள்ளோம்.

அத்துடன், 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை அடுத்த வருடம் மே அல்லது ஜூன் மாதத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். பல்வேறு பிரச்சினைகள் காரணமாக இம்முறை இடம்பெற்ற பரீட்சை பெறுபேறுகள் தாமதமாகியுள்ளன. பல பாடங்களுக்கான நடைமுறைப் பரீட்சைகள் நடத்தப்படவேண்டும்.

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை திட்டமிட்டபடியே உரிய திகதியில் வெளியிட்டோம்;. இம்முறை சுமார் 6 இலட்சம் பேர் க.பொ.த சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். பரீட்சை முடிவுகளை விரைவுபடுத்துமாறு பரீட்சை திணைக்களத்திற்கு அறிவித்துள்ளோம் என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# ஜனாதிபதி ரணிலின் சூழ்ச்சிகள் வெற்றிபெற இடமளிக்கமுடியாது

## விஜித ஹேரத் திட்டவட்டம்

பொதுத்தேர்தலை பிற்போடுவதற்கு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. 2024 ஆம் ஆண்டு தேசிய தேர்தல்கள் நிச்சயம் நடத்தப்பட வேண்டும்.

காலவரையறையின்றிபிற்போடப்பட்டுள்ள உள்ளூராட்சிமன்றத்தேர்தலைநடத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு அவதானம் செலுத்த வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்அமைச்சுக்கானசெலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நாட்டின் அரச இயந்திரத்தில் அரச சேவையாளர்கள் முக்கியமானவர்களாக உள்ளார்கள். தற்போதைய நிலையில் அரச சேவையாளர்களால் வாழ முடியாத நிலை காணப்படுகிறது.

கடந்த ஆண்டைக் காட்டிலும் தற்போது வாழ்க்கை செலவுகள் பன்மடங்கு அதிகரித்துள்ளன. ஆனால், வருமானம் ஒரு சதத்தில் கூட உயர்வடையவில்லை.

வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கப் பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கிறோம் என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குடும்பம் தனது அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஒரு மாதத்துக்கு 74 ஆயிரம் ரூபாவை செலவிட வேண்டியுள்ளது என புள்ளிவிவரவியல் திணைக்களம் குறிப்பிடுகிறது. 75 ஆயிரம் ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறும் எத்தனை அரச சேவையாளர்கள் உள்ளனர்.

ஒரு பட்டதாரி அரச சேவையாளரின் அடிப்படை சம்பளம் 31 ஆயிரம் ரூபாவாக உள்ளது. அரசாங்கத்தின் புதிய வரி விதிப்பு அரச சேவையாளர்களுக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த மக்களுக்களும் பாதிக்கப்படுவார்கள்.

அரச சேவையாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்க ஒரு மாதத்துக்கு 133 பில்லியன் ரூபாவைச்செலவழித்துவிட்டு, அரச சேவையாளர்கள் உட்பட ஒட்டுமொத்த சேவை தரப்பினரிடமிருந்து மாதாந்தம் 1094 பில்லியன் ரூபாவை வரி வருமானம் ஊடாக பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நான்கு பேர் உள்ள குடும்பத்துக்கு 74 ஆயிரம் ரூபா ஒரு மாதத்துக்கு தேவை என்று குறிப்பிடுகின்ற நிலையில் 10 ஆயிரம் ரூபா குறைந்தபட்ச கொடுப்பனவு ஒருபோதும் சாதகமாக அமையாது என்பதால் எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆயிரம் ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று அரச சேவையாளர்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள். இந்தக் கோரிக்கைக்கு அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை.

பெருந்தோட்ட மக்கள் பாரிய போராட்டத்துக்கு மத்தியில் 1000 ரூபா சம்பளத்தைப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் இன்று 1000 ரூபா ஒருநாள் செலவுகளுக்கு போதுமா? குறைந்தபட்சம் 2500 சம்பளத்தைப் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

அரச சேவைகளுக்கான ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டுக்குபிறகு ஆட்சேர்ப்புக்கு இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு முழுமையாக ஓய்வூதிய கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது. இந்தத் தீர்மானத்தை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2016 ஆம் ஆண்டு எடுத்தார். இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் தான் இன்று 14 லட்சத்துக்கும் அதிகமானோர் அரச சேவையில் ஈடுபடுகிறார்கள்.



கிராமசேவகர்சேவையில் பாரிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. 2016ஆம்ஆண்டு புதிய ஆட்சேர்ப்புக்கான பரீட்சை இடம்பெற்றது. பெறுபேறுகளும் வெளியாகியுள்ளன. ஆனால் இன்றுவரை நியமனங்கள் வழங்கப்படவில்லை. கிராம சேவகர் அலுவலகங்களுக்கு மாதாந்தம் வாடகையாக 2500 ரூபா வழங்கப்படுகிறது. தற்போதைய வாழ்க்கை செலவுகளுக்கு மத்தியில் 2500 ரூபா எந்தளவுக்கு போதுமானது. கிராம சேவையில் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உடனடியாகத்; தீர்வு காண வேண்டும்.

1997 ஆம் ஆண்டு சேவையில் இருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் ஓய்வூதிய கொடுப்பனவு பிரச்சினைகளுக்கான தீர்வு எட்டப்படவில்லை. ஓய்வூதியக் கொடுப்பனவு பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பல அரச சேவையாளர்கள் உயிரிழந்துள்ளார்கள். ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளரின் பெயரும் ஓய்வூதிய கொடுப்பனவு பிரச்சினைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட பகுதிகளில் பிரதேச சபைகளில்மொழிபிரச்சினைகாணப்படுகிறது. தமிழ்மொழிபேசுபவர்கள்பிரதேசசபைகளில் இல்லாதகாரணத்தால்பெருந்தோட்டபகுதிகளில் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அம்பகமுவ, நுவரெலியா பிரதேச சபைகளில் இந்த பிரச்சினை காணப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.அடுத்தஆண்டுஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் நடக்கும் என்று ஜனாதிபதி குறிப்பிட வேண்டிய தேவையில்லை.

பொதுத்தேர்தலை பிற்போடுவதற்கு ஜே.ஆர்.ஜயவர்தன எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. அரசமைபில் குறிப்பிடப்பட்டுள்ளபடி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும்.அடுத்த ஆண்டு தேர்தல்களை நிச்சயம் நடத்த வேண்டும் அப்போது தான் ஜனநாயகம் பாதுகாக்கப்படும். - என்றார். (05)

# இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் கிழக்குக்கு வருகை

## துார இந்துனில் சாட்டை



இலங்கைக்கான தென்னாபிரிக்க நாட்டு உயரஸ்தானிகர் சண்டிலி இ.ஸ்சோல்க் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்தார்.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்த தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் கிழக்கின் பிரசித்தி பெற்ற பாடசாலையான ஆங்கிலேயரால் ஸ்தாபிக்கப்பட்ட மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரிக்கு விஜயம் செய்து கல்லூரி தேவைகள் குறித்தும் கல்லூரி அதிபருடனும் நலன் விரும்பிகளுட னும் கலந்துரையாடினார்.



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின்வழிகாட்டலில்கிழக்கு மாகாண சுற்றுலா அதிகார சபையின் தலைவர் ஏ பி மதன் நெறிப்படுத்தலில் குறித்ததென்னாபிரிக்கமிகஸ்தானிகள் மட்டக்களப்புக்குவிஜயம்செய்திருந்தார்.

புனிதமிக்கேல்கல்லூரியின்அதிபர் அண்டன்பெனடிக்ஜோசப்தலைமையில் பாடசாலையின் அபிவிருத்தி குறித்தும் பாடசாலையினுடைய தேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளர் விவேகானந்தன் பிரதீபன் உள்ளிட்ட பலர் இங்கு சமூகம் அளித்திருந்தனர். பாடசாலையின் தேவைகள்குறித்துஉயரஸ்தானிகரிடம் முன்வைக்கப்பட்டவேண்டுகோள்களை ஏற்றுக்கொண்ட அவர், எதிர்காலத்தில் இது தொடர்பாக பரிசீலனை செய்வதாக உறுதி அளித்துள்ளார். (05)

# ஒழுக்க விழுமியங்களுக்கு மாறாக செயற்பட்டால் பதவி நீக்கலாமாம்

## ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டென்கிறார் பந்துல

அமைச்சரவை அமைச்சர் ஒருவர் அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து தீர்மானங்களை எடுப்பதற்காகவே நியமிக்கப்பட்டுள்ளார் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர்,எதிர்கட்சியுடன்இணைந்து பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தால் ஆளும் கட்சியில் இருக்க வேண்டிய தேவை இல்லை எனவும் குறிப்பிட்டார்.



நாட்டிலுள்ள பிரச்சினைகளை அரசாங்கத்துடன்கலந்தாலோசித்து தீர்மானங்களை எடுப்பதற்கே அமைச்சரவை அமைச்சர் ஒருவர் இருக்கின்றார்.

அரசாங்கத்தால் அந்த பிரச்சினையை தீர்க்க முடியாது. அதனால் எதிர்கட்சியுடன் இணைந்து பிரச்சினைக்குத்தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை இருந்தால் நாங்கள் எதற்கு அரசாங்கத்துடன்இருக்கின்றோம்?

எந்தவொரு தரப்பினருடனும் பேச்சு நடப்படவேண்டுமானால் உரிய தரப்பினரை அமைச்சரவைக்குவரவழைத்துபேச்சுகளை நடத்தி தீர்வு காண முடியும்.

வரலாற்றில் அமைச்சரவை ஒழுக்க விழுமியங்களுக்கு மாறாக செயற்பட்ட அனைவரையும் குறித்த சந்தர்ப்பங்களில் ஜனாதிபதிகளாக இருந்தவர்கள் பதவி நீக்கம்செய்திருக்கின்றார்கள்.

இவ்வாறே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச முன்னாள்அமைச்சர்மங்கள சமரவீரவை பதவிநீக்கம் செய்தார்.

இவ்வாறே இந்த அமைச்சரவையிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பல காரணிகளை விசாரித்து நாடாளுமன்றஉறுப்பினர்ரொசான் ரணசிங்கவுடன் இணைந்து அமைச்சரவைநடவடிக்கைகளை முன்னெடுக்க சிரமம் என்று குறிப்பிட்டுபதவிவிலகல்கடிதத்தை வழங்கினார்' என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# வரவு - செலவுத் திட்டத்தில் 40 கோடி ரூபாய் நிதி கோப்பி பயிர்ச் செய்கைக்கு ஒதுக்கீடு



அடுத்த வருடத்திற்குள் 400 ஹெக்டேயர் கோப்பியை பயிரிட விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்அமைச்சுதீர்மானித்துள்ளது.இதற்காக வரவு செலவுத் திட்ட ஆவணத்தில் இருந்து 400 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

தற்போது பிரதான தோட்டப் பயிராக கோப்பி பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாவிட்டாலும், வெளிநாட்டு சந்தையில் கோப்பிக்கான அதிக தேவையைக் கருத்திற்கொண்டு மீண்டும் கோப்பி செய்கையை தோட்டப் பயிராகபிரபலப்படுத்தநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதனால்ஒருஹெக்டேயருக்கு 10 லட்சம் ரூபா கோப்பி பயிர்ச் செய்கைக்காக வழங்கப்படும் எனவும் அதில் 50 வீதம் தொகை மீளப்பெறப்பட மாட்டாது எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

வரவு செலவுத் திட்ட ஆவணத்தின் ஊடாக 2024 ஆம் ஆண்டுக்கான விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சால் 96 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அரேபிகா கோப்பி, ரோபஸ்டா கோப்பி, லைபெரிகா கோப்பி ஆகியவை இந்த நாட்டில் வளர்க்கப்படுகின்றன. இவற்றில் அரேபிகா கோப்பி மிகவும் பிரபலமான கோப்பி ரகமாகும், மேலும் அந்த கோப்பி சாகுபடிக்கு முன்னுரிமை அளிக்குமாறு ஏற்றுமதி வேளாண் துறைக்கு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பசுமைப் பொருளாதார முயற்சிகள்

உலக சுற்றுச்சூழல் தினம் சுற்றுச்சூழலுக்கான மிகப்பெரிய பன்னாட்டுத் தினம். ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தால் (UNEP) வழிநடத்தப்பட்டு, 1973 முதல் ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்பட்டு, சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கான மிகப்பெரிய உலகளாவிய தளமாக இது வளர்ந்துள்ளது.

உலக சுற்றுச்சூழல் தினத்தின் இந்த ஆண்டுக்கான மாநாடு மேற்கு ஆப்பிரிக்க நாடான கோட் டி ஐவரி (ஐவரி கோஸ்ட்) ஆல் நடத்தப்படுகிறது. நெதர்லாந்து அரசு இதற்குத் தேவையான ஆதரவு மற்றும் அனுசரணையை வழங்குகின்றது. நெகிழிக்கு (பிளாஸ்ரிக்) எதிரான பரப்புரை என்கிற கருப்பொருளின் கீழ் இந்த ஆண்டுக்கான மாநாடு கவனம் செலுத்துகின்றது.

நெகிழி மாசு விடயங்களில் மக்களின் நடவடிக்கைகள், பங்கு என்பன என்னவாக இருக்க முடியும் என்பதை இந்த மாநாடு நினைவூட்டியுள்ளது. நெகிழி மாசுபாட்டைச் சமாளிக்க அரசுகளும் வணிக நிறுவனங்களும் எடுத்துவரும் நடவடிக்கைகள் ஐ.நாவின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நடவடிக்கைகளின் விளைவுகளாகும். இன்று (நவம்பர் 30) முதல் டிசெம்பர் 12 வரை, ஐக்கிய அரபு எமிரேட்ஸின் தலைநகரான துபாயில் ஐ.நா.வின் கட்சிகளின் மாநாடு (COP28) நடைபெறுகிறது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, காலநிலை மாற்ற ஜனாதிபதியின் ஆலோசகர் ருவான் விஜேவர்தன உள்ளிட்ட 80 பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்டக் குழுவொன்றும் இந்த மாநாட்டில் கலந்துகொள்கிறது. இவர்களுடன் மேலும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த உச்சி மாநாட்டிற்காக துபாய் சென்றுள்ளனர்.

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கும் பசுமைப் பொருளாதாரம் குறித்து இந்த அரங்கில் இலங்கை சார்பில் அதிகளவு கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளன என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

'நாங்கள் மூன்று முக்கிய முன்முயற்சிகளில் கவனம் செலுத்துகிறோம்: வெப்பமண்டல பெல்ட் முன்முயற்சி, காலநிலை நீதி மன்றம் மற்றும் சர்வதேச காலநிலை மாற்ற பல்கலைக்கழகம்' என்று அரசுத் தலைவரின் காலநிலை மாற்ற ஆலோசகர் ருவான் விஜேவர்தன தெரிவித்திருக்கிறார்.

வெப்ப மண்டலப் பகுதியில் உள்ள நாடுகளில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் பசுமைத் தொழில்நுட்பம் போன்ற பசுமை முயற்சிகளில் முதலீடு செய்ய வளர்ந்த நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க வெப்ப மண்டலப் பகுதி முன்முயற்சி பயன்படும் என்று குறிப்பிட்டார்.

'வெப்ப மண்டலத்தில் காலநிலை மாற்றத்தால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நாடுகள் உள்ளன, ஆனால் வறுமையுடன் போராடுகின்றன மற்றும் கடனில் மூழ்கியுள்ளன' என்று விஜேவர்தன குறிப்பிட்டார். இந்த நாடுகளின் கடனாளர்களிடம் கடனின் ஒரு பகுதியை ஈடுசெய்யவும் குறைக்கவும் முறையீடு செய்வதன் மூலம் கடன் சுமைகளைக் குறைக்க முற்படுவதன் மூலம் காலநிலை நீதிமன்றம் உதவும் என்று அவர் கூறினார்.

இலங்கை நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட ஒரு நாடு. அதனால் அது காலநிலை மாற்றத்தால் பெரிதும் பாதிக்கப்படும் அபாயம் உள்ள நாடும்கூட. காலநிலை மாற்றத்திற்கு இலங்கை வழங்கிய பங்களிப்பைவிடவும் அதனால் அடையப்போகும் பாதிப்பு மிக உயர்வானது. எனவேதான் அதனை வைத்துப் பொருளாதார அபிவிருத்தியை அடையலாம் என்று அரசுத் தலைவர் கணக்கிடுகிறார். 2048 அபிவிருத்தி என்கிற ரணிலின் திட்டத்தில் பசுமைப் பொருளாதாரத்திற்கு அதிகளவு முக்கியத்துவம் இருக்கின்றது. அதனால் இந்த மாநாடும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகின்றது.

# நீரின் அருமை அறிவோம்

என். பத்ரி



நாம் வாழும் உலகம் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களால் ஆனது. இவை நமக்கு அளிக்கப்பட்ட இயற்கையின் கொடைகள். இவற்றில் நெருப்பினைத் தவிர மற்ற அனைத்தையும் நாம் மாசுபடுத்தி வருகிறோம். நெருப்பினை மட்டும் நம்மால் மாசுபடுத்த இயலவில்லை. நாமே திருந்தும்வரை அரசின் சட்டங்கள் எதுவும் நமக்கு கைகொடுக்கப் போவதில்லை.

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான நீர், வான்மழையால் மட்டுமே நமக்கு கிடைக்கிறது. மழைக் காலத்தில் அதை சேகரித்து வைக்கும் பழக்கம் நம்மிடையே முற்றிலும் மறைந்துவிட்டது.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் தண்ணீர் டைனோசர்கள் காலத்திலிருந்தே ஏதோ ஒரு வடிவத்தில் இருந்து வருகிறது. பூமியின் மேற்பரப்பு மூன்றில் இரண்டு பங்கு நீரால் சூழப்பட்டிருக்கிறது. இந்த நீர் கடல்கள், ஆறுகள், ஏரிகள், ஓடைகள் ஆகியவற்றில் பரவியிருக்கிறது.

நிறைய நீர் இருப்பினும், அதில் 0.3%- க்கும் குறைவாகத்தான் மனிதநுகர்வுக்கு உதவக்கூடியதாக இருக்கிறது. வணிகமயமாக்கலும், தொழில்மயமாக்கலும், பெருகி வரும் மக்கள் தொகையும் அந்த



விழுக்காட்டைத் தற்காலத்தில் குறைத்து வருகின்றன.

மனிதர்களுக்குக் குடிப்பதற்கும், சமைப்பதற்கும், துணி துவைப்பதற்கும், பயிர்களின் பாசனத்திற்கும் நீர் பயன்படுகிறது. நமது உடலும் பெரும்பகுதி நீரைக் கொண்டிருக்கிறது. எனினும், நீர் ஆதாரங்களை நாம் தொடர்ந்து மாசுபடுத்தி வருவது அதிகரித்து வருகிறது. நீர் மாசுபாடு உலகில் வாழும் எந்தவொரு உயிரினத்திற்கும் தீங்கு விளைவிப்பதாகும்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நீரினை மாசுபடுத்தும் நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருவது வேதனைக்குரியது. நீர் மாசுபடும்போதெல்லாம் அதைச்சார்ந்த நிலமும் மாசடைவது தவிர்க்கவியலாதது.

மாசுபட்ட நீரால் ஏற்படும் மினமாட்டா நோய், முதல் முதலில் 1956-இல் ஜப்பானில் உள்ள மினமாட்டா நகரில் கண்டு பிடிக்கப்பட்டது. இது சிஸ்ஸோ கோர்ப்பரேஷனின் இரசாயன தொழிற்சாலையில் இருந்து வெளியேறிய கழிவுநீரில் மெத்தில்மொர்குரி கலந்திருந்ததால் ஏற்பட்டது என்று கண்டறியப்பட்டது.

இது 1932 முதல் 1968 வரை தொடர்ந்தது. மினமாட்டா மக்கள் கடல் உயிரினங்களை உண்ணும்போது அதில் பாதரச விஷ பாதிப்பு ஏற்ட்டது. அதனால், பூனை, நாய், பன்றி போன்ற விலங்குகள் மட்டுமல்லாமல்



மனித உயிரிழப்புகளும் 36 ஆண்டுகள் தொடர்ந்தன.

நீர்நிலைக்களில் கரிம, கனிமப் பொருட்கள் சிதைவுறுதல், தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர், வீட்டுக்கழிவுநீர், கதிரியக்கக் கழிவுகள், கச்சா எண்ணெய், பயிர்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லிகள் போன்றவை நீரை பெரிதும் மாசுபடுத்துகின்றன. நச்சு ரசாயனங்களால் தண்ணீரில் ஆக்ஸிஜனின் அளவு குறைந்து வருகிறது.

குடிதண்ணீருடன் கழிவுநீர் கலந்துவருவதாகப் பலநேரங்களில் புகார்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. இந்த நீரைக் குடிப்பவர்கள் வயிற்றுப்போக்கு, கொலரா உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். இவர்களில் பலர் இறக்கவும் நேரிடுகிறது.

நீர்நிலைகளில் நாம் வீசும் திடக்கழிவுகள் நீர்வாழ் உயிரினங்களுக்கும் தீங்கு விளைவிக்கின்றன. இதனால், இது சுற்றுச்சூழல் அமைப்பையே சீர்குலைய வைக்கிறது. கடல் உணவுகளை உண்பவர்களுக்கும் உடல்நலக் குறைபாடுகள் ஏற்படும் அபாயம் உள்ளது.

நீர் மாசுபடுவதால் ஏற்படும் நச்சு இரசாயனங்கள், நாம்



உட்கொள்ளும் உணவின் வழியாக நம் உடலில் நுழைந்து நோய்களையும் சில நேரங்களில் இறப்பையும் ஏற்படுத்துகின்றன. பெரும்பாலான நேரங்களில், இது உள்ளூர் மக்களை மட்டும் பாதிக்கலாம். ஆனால் காலப் போக்கில் நாடு முழுதும் இவை எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

நீர் மாசுபாடு தொடர்ந்து நடைபெற்று வருவதால் குடிக்கும் தண்ணீரையே விலை கொடுத்து வாங்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. நீர் மாசுபாட்டின் விளைவுகள் எதிர்காலத்தில் இன்னும் மோசமாக இருக்கக்கூடும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பல்வேறு பொருட்களை எளிதில் கரைக்கும் சிறந்த கரைப்பான் நீர். எனவே, கழிவுகளை நேரடியாக நீர்நிலைகளுக்கு அனுப்புவதை நிறுத்தவேண்டும். ஆற்று நீரில் கழிவுகளை வெளியேற்றும் தொழிற்சாலைகளுக்கு கடும் தண்டனை விதிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

நீர்நிலைகளைப் பாதுகாக்க முறையான வழிமுறைகள் பின்பற்றப்படுவதை நீரியல் வல்லுனர்கள் உறுதி செய்ய வேண்டும். நீர் மாசுபாட்டின் பாதகமான தாக்கத்தை பொது மக்கள் சரியாக புரிந்துகொள்ளவேண்டும். இதை உறுதிசெய்ய அரசு விழிப்புணர்வு கூட்டங்களை தேவைப்படும் இடங்களில் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

நீர்நிலைகளைச் சுற்றி அதிக மரங்கள் நடப்பட வேண்டும். இயற்கையாகவே மறுசு ழற்சி செய்ய அவை உதவுகின்றன. 'வாட்டர் ஹைசின்த்' என்றழைக்கப்படும் தாவரமானது, நீர்நிலைகளில் கரைந்துள்ள காட்மியம், பாதரசம் போன்ற அபாயகரமான சேர்மங்களை உறிஞ்சி, நீர்மாசுகளை நீக்கி சுற்றுச்சூழலைப் பாதுகாக்கிறது.

நீர்நிலைகளில் இரசாயனங்கள், பிற பொருட்களை நேரடியாக வெளியேற்றும் முன், தொழிற்சாலைகள் அவற்றின் கழிவுகளை கவனமாகக் கையாள வேண்டும். தொழிற்சாலைகள் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை உருவாக்க வேண்டும்.

கழிவுநீரை சுத்திகரித்து ஆற்றில் பாதுகாப்பாகக் கலக்கும் முறையை ஒவ்வொரு தொழிற்சாலையும் கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டும். இதனால் தண்ணீரை மறுசுழற்சி செய்வதும் சாத்தியமாகிறது.

அயனி பரிமாற்றம், தலைகீழ் சவ்வூடுபரவல் போன்ற இரசாயன நடைமுறைகள் நீர் மாசுபாட்டை கணிசமாகக் குறைக்க வல்லவை.

ஒவ்வோர் ஆண்டும் சுமார் ஆறு பில்லியன் (600 கோடி) கிலோ கிராம் குப்பை கடலில் கொட்டப்படுகிறது. இது தொடர்ந்தால் விரைவில் நமது உலகம் மனிதர்கள் வாழத் தகுதியற்றதாக மாறிவிடும். நம் குழந்தைகளுக்கு நீர்மாசு சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இப்போதாவது நீரின் அருமையை நாம் உணராமல் போனால், வருங்காலத்தில் நமது சந்ததியினர் குடிக்க நீர் கிடைக்குமா என்பது கேள்விக்குறியே.

# நல்லிணக்கம் தொடர்பான அரசின் இரட்டை நிலையை மாவீரர் நாளில் பொலிஸாரின் நடவடிக்கை காட்டியது

## சாணக்கியன் காட்டம்



மாவீரர்நாள்நினைவேந்தல்பொலிஸாரால் சீர்குலைக்கப்பட்டமை உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங்களில் அரசாங்கத்தின்இரட்டைதோற்றம்இவ்வாறான சம்பவங்கள்மூலம்நிரூபணமாகியுள்ளதாகத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புதெரிவித்துள்ளது.

நல்லிணக்கத்திற்கான சிறந்த வழியாக இருக்கக்கூடியஇவ்வாறானநினைவேந்தலைக் கூட அரசாங்கம் அனுமதிக்காவிட்டால், இந்த நாடு முன்னேறாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இந்த நினைவேந்தல் என்பது விடுதலைப் புலிகளைக் கொண்டாடுவதற்காக அல்ல என்றும்,மூன்றுதசாப்தகாலஇனக்கலவரத்தின் போதுஉயிரிழந்தஅனைத்துபொதுமக்களையும் நினைவுகூருவதற்காகவே மாவீரர் தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது என்றும் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள்எதிர்நோக்கும்பிரச்சினைகளுக்கு தீர்வு காண உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுவருகின்றபோதிலும்தமிழர்களின் உரிமைகளை அரசாங்கம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதே இச்சம் பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எந்தவொரு அரசாங்கமோ அல்லது பெரும்பான்மைமக்களோமேற்கொள்ளும் இவ்வாறான செயற்பாடுகள் குறிப்பிட்ட நாட்டில் நல்லிணக்கப் பொறிமுறைக்கு இடையூறாக அமையும் என இரா. சாணக்கியன்மேலும்தெரிவித்துள்ளார்.(05)

# மண்ணில் புதைக்கப்பட்டிருந்த 34 கிலோ கேரள கஞ்சா மீட்பு



யாழில் சுமார் 34 கிலோ கிராம் கேரள கஞ்சாவை மண்ணுக்குள் புதைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்குப் பகுதியைச்சேர்ந்த 24 வயதான இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மீட்கப் பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் 13 மில்லியன் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஓமானில் பெண் தற்கொலை அவரது இறப்பில் சந்தேகம்

## பெற்றோர் கூறுகின்றனர்



ஓமானில்வீட்டுப்பணிப்பெண்ணாகபணிபுரிந்த 39 வயதான ஆனமடுவ பிரதேசத்தைச் சேர்ந்த திருமணமாகாத பெண் ஒருவர் ஐந்து மாடிக் கட்டடத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார் எனவும் அவரது சடலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

ஆனமடுவ குமாரகம பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதான ஜே.ஏ.ஷிரோமி பிரதீப் ஜயக்கொடி என்ற திருமணமாகாத பெண்ணே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆறு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் இரண்டாவது பெண்ணான இவர், மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

உயிரிழந்த பெண்ணின் தாய், தந்தை மற்றும் உறவினர்கள்கூறுகையில், அவர்கட்டடத்தில்இருந்து குதித்து தற்கொலை செய்து கொள்ளுமளவுக்கு மன வலிமை அற்றவர் அல்லர்.

மேலும், இந்தப் பெண் போலி வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்றினால் சுற்றுலா வீசாவில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.கடந்த கொரோனா காலத்தில் இலங்கைக்கு வந்து இந்த வருடம் ஜூலை 20 ஆம் திகதி ஓமா னுக்கு வேலைக்குச் சென்றதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நீரிழிவு விழிப்புணர்வு நடை பவனி லயன்ஸ் கழகங்களின் ஏற்பாட்டில்




சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி1 இன் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் செவ்வாய்க்கிழமை நீரிழிவு நடைபவனியும் இரத்தப் பரிசோதனையும் நடைபெற்றது.

யாழ்ப்பாணமட் வண்ணார் பண்ணை சிவன் ஆலய முன்றிலில் ஆரம்பமான நடைபவனி, யாழ். பஸ்நிலையம் ஊடாக யாழ். போதனா வைத்தியசாலை வீதி ஊடாக கார்கிள்ஸ் கொம்பிளெக்ஸ் பகுதியைச் சென்றடைந்து நிறைவடைந்தது. பின்னர் அங்கு இலைக்கஞ்சி வழங்கப்பட்டதுடன், இலவச குருதிப் பரிசோதனையும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றரும் சிறப்பு விருந்தினராக அகில இலங்கை லயன்ஸ் கழகங்களின் முன்னாள் தலைவர் லயன் தேவா டி பீற்றர், வடக்கின் முதலாவது ஆளுநர் லயன் எஸ்.எஸ். தங்கராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

நடைபவனியில் வடக்கில் உள்ள சகல லயன்ஸ் கழகங்களின் உறுப்பினர்கள்லியோகழகஉறுப்பினர்கள்என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, குருதிப் பரிசோதனையில் பங்குகொண்ட மக்களுக்கு கொய்யா, நாவல், மஞ்சள், கஜீ மரங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

இதேநேரம்,வடபகுதியில்எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாபெரும் டெங்கு விழிப்புணர்வு செயற்றிட்டங்களை மேற்கொள்ளவும் லயன்ஸ் கழகங்கள் திட்டமிட்டுள்ளன என லயன்ஸ் கழக முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். (05)






# இத்தாலியில் மூளைச்சாவடைந்தவரின் உறுப்புகள் உறவினர்களால் தானம்



இத்தாலியின் சிசிலி தீவில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த மூளைச்சாவடைந்த இலங்கையர் ஒருவரின் இரண்டு சிறுநீரகங்கள், இதயம், கல்லீரல், நுரையீரல் மற்றும் இரண்டு கண்கள் ஆகியன அந்நாட்டில் உள்ள நோயாளிகளுக்குத் தானமாக வழங்கப்பட்டுள்ளன.

அவரது மனைவி, தாய் மற்றும் இரு சகோதரர்களின் இணக்கத்துடனேயே அவரது உடலுறுப்புகள் தானமாக வழங்கப்பட்டன.

ஷமில பெர்னாண்டோ என்ற 35 வயதுடைய நபரின் உடல் உறுப்புகளே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளனர்.

இவரது மனைவி கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் நாடு திரும்பியதாகவும், இரண்டு சகோதரர்கள் பல வருடங்களாக இத்தாலியில் பணிபுரிவதாகவும் தெரிய வருகிறது.(05)

# மோட்டார் சைக்கிள் திருடியவர் போதைப்பொருளுடன் கைது

பல்வேறு பிரதேசங்களில் மோட்டார் சைக்கிள்களை திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் போதைப்பொருளுடன் செவ்வாய்க்கிழமை மேல்மாகாண தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் தெகிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடையவராவார்.

வெலிக்கடை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையின் போது சந்தேக நபரிடத்திலிருந்து 2 கிராம் 130 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருளுடன் பல்வேறு இடங்களில் திருடப்பட்ட 7 மோட்டார் சைக்கிள்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல்மாகாண தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)



## சவூதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் எழுப்பியகேள்விஒன்றுக்குபதிலளிக் கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவிக்கையில், மன்னார் புத்தளம் வீதி நூறு வருடங்களுக்குமுன்னர்வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட வீதியாகும். 2009இல் போர் முடிந்த பின்னர் திறந்துவைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது.

அந்தப் பாதை வழியாக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வருகின்றபோது பயணத்தூரம் நூறு கிலோ மீற்றகளுக்குக் குறையும். இவ்வறு வந்து திரும்பும்போது 200 கிலோ மீற்றர் தூரம் குறைவாக இருக்கும். நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் இது மிகவும் உதவியாக இருக்கிறது.

இந்த பாதையை எங்கள் ஆட்சியில் இருக்கின்றபோது கார்பட் இட்டு புதுப்பிக்கப்பட்டது. சில அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளிநாடுகளிடமிருந்து உதவி பெற்று வழக்குத் தொடுத்தார்கள். இதன் காரணமாக கார்பட் இடும் பணி நிறுத்தப்பட்டு சுமார் 30 கிலோ மீற்றர் வரை இன்னும் கார்பட் போடப்படாமல் இருக்கிறது.

இதுதொடர்பாககவனம்செலுத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துகலந்துரையாடிமன்னார் புத்தளம் வீதியை செப்பனிட நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த வழக்கு பாதையை மூடிவிடுமாறுபோடப்பட்டதல்ல. மாறாகபாதையைபுனரமைப்பதற்கு எதிராகவே போடப்பட்டது. இதன் காரணமாக 4 வருடங்களாக இந்த பாதை மூடப்பட்டுள்ளது.

சவூதிநிதியத்தின்எஞ்சியபணத்தி லாவது இதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனால் இது தொடர்பாக உடனடியாககவனம்செலுத்தி இந்த பாதையை மக்கள் பானைக்காக திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்ததாவது:

அனைத்துவீதிஅபிவிருத்திகளும் ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியிலேயே மேற்கொள் ளப்படுகின்றன. ஆனால் இந்த கடன்கள் தற்போது முழுமையாக நிறுத்தப்பட்டிருக்கின்றது. கடன் மறுசீரமைப்புக்கு பின்னர் இந்த நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்த முடியும்.அத்துடன் சவூதி நிதியத்தின் எஞ்சிய பணமும் தற்போது நிறைவடைந்துள்ளது. தூவடக்கு கிழக்கு மாத்திரமின்றி சவூதி நிதியம் மூலம் ஏனைய மாகாணங்களுக்கும் அதிகமான உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதனால் எதிர்வரும் காலத்தில் சவூதிக்குச் சென்று இது தொடர்பில் பேசஇருக்கின்றேன்.அத்துடன்ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட ஏனைய நிதியங் களின் நிதிகளும் தற்போது நிறுத்தப் பட்டுள்ளன. ஆனால் சவூதி நிதியத்தால் எமக்கு கிடைத்துவந்த பணம் நிறுத்தப்படாமல் எமக்கு கிடைத்து வருகிறது. அதற்காக நாங்கள் சவூதி அரசுக்கு நன்றி தெரிவிக்கிறோம் என்றார்.

## சர்வதேசப் போட்டியில் யாழ். மாணவர்கள்




சிறுவர்களுக்கான மன வளர்ச் சித் திட்டமான ஜப்பானிய அபாகஸ் முறையிலமைந்த யுசி மாஸ் கற்கையின் சர்வதேச மனக் கணிதப் போட்டியின் 2023 ஆண்டு நிகழ்வுகள் டிசெம்பர் 3 மலேசியாவில் நடக்கவுள்ளன. இதில் இலங்கையில் இருந்து 62 மாணவர்கள் பங்கேற்கவுள்ளனர். இவர்களில் யாழ்ப்பாணம் திரு நெல்வேலி நிலையத்தில் இருந்து மட்டும் 19 பேர் பங்கேற்கின்றனர்.

"பயிற்றுவிப்பாளர்களின் மாதக் கணக்கான அர்ப்பணிப்பும், பல வருட அனுபவமுமே இந்த இளையவர்களின் திறமைகளை இந்த அரங்குக்கு கொண்டு வந்துள்ளது.

அவர்கள் இலங்கையை பெருமைப்படுத்துவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்'' என்று திருநெல்வேலிக் கிளையின் பொறுப்பதிகாரி ராதை பாஸ்கரன் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணம்திருநெல்வேலிக் கிளையின் 17 வருட சாதனைப் பயணம், புத்தாக்கம் மிக்க மாணவர்களை உருவாக்குவதில் பெரும் வெற்றி கண்டிருப்பதனை தேசிய மற்றும் சர்வதேச போட்டிக ளின் மூலமாகக் கண்டுகொள்ள முடியும்.

ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் தேசிய மற்றும் சர்வதேசப் போட்டி வெற்றிகளில் யாழ் /திருநெல்வேலி யுசிமாஸ் கிளை முன்னணி வகிக்கின்றது'' என்றும் அவர் தெரிவிக்கிறார்.

மலேசியாவில் நடக்கவுள்ள போட்டியில் 80 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பிள்ளைகள் பங்கேற்கின்றார்கள்.



## நாடாளுமன்றக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கை நிதியம், ஜெஃப்ரி பாவா அறக்கட்டளை நிதியம், தேசிய அருங்கலைகள் பேரவை, நுண்கலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இதற்கமைய நாடாளுமன்றக் கட்டடம், செங்கோல், வெள்ளிக்கதவு, பித்தளைக்கதவு, சிங்கஉருவத்துடன் கூடிய கதவு, சபா மண்டபத்தின் தடை எல்லை, 18 பித்தளைக் கொடிகள், ஒன்றுகூடல்மண்டபத்தின் கூரைத்தகடு, பித்தளைக் கதவுக்கு முன்னால் உள்ள கூரைத் தகடு, நிகழ்வுகளின் போதான 18 இலட்சனைகள், கோட்டுக் கலை, உறுப்பினர்களின் நுழைவாயிலில் உள்ள மரச்சுவரோவியம், பணியாளர்கள் நுழைவாயிலில் உள்ளசுவரோவியம், பிரமுகர்களின் முகப்புக்கூடம், நாடாளுமன்ற உறுப்பினர்களின்உணவுக்கூடத்தில் உள்ள ஓவியங்கள், இரண்டாவது மாடியிலுள்ள புகைப்படத்தொகுப்பு, கீழ்மாடியிலுள்ளபுகைப்படத்தொகுப்பு மற்றும் வேறு பெறுமதி மிக்க புகைப்படம் மற்றும் ஓவியங்களின் காட்சிக்கூடத்தில் உள்ள தொல்பொருட்களைப்பாதுகாப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ளகட்டக்கலையைப்பாதுகாக்கக் குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால தீர்வுகளை உள்ளடக்கிய பிரேரணையை தயாரிக்கவும், அந்தக் கட்டடக்கலை குறித்து முறையான ஆய்வு நடத்தி தனித்தனியாக பல குழுக்களை அமைக்கவும் சபாநாயகர் முன்மொழிந்தார். அதற்கு இங்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

இதன்படி, முழுமையான பிரேரணை மற்றும் எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு எதிர்வரும் டிசெம்பர் 12 மீண்டும் கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகஅமைச்சர்பந்துலகுணவர்தன, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, பணியாட்தொகுதியின் பிரதானியும், நாடாளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன, படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர்.

## பொருளாதாரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவு, செலவுடன் கூடிய பற்றக்குறையுடனான வரவு, செலவுத்திட்டம் காணப்படுகின்றது. கடன்சுமையின் பெரும் பகுதி வெளிநாட்டுக்கடனாகும். இது மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்படுகின்றது.

மக்கள் கொள்கை ரீதியில் மாற்றமொன்றை எதிர்பார்க்கின்றபோது, அரசியல் கட்சிகளிடத்தில் ஒன்றைக் கேட்க வேண்டும். அதாவது, எவ்வாறு பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்ப போகின்றீர்கள். வரி அறவீட்டின் மூலம் அதனைச் செய்ய முடியுமா என்பதே அந்தக் கேள்வியாகும். இந்தப் பிரச்சினையை தீர்க்காது விட்டால் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியாது என்றார்.

## அடுத்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியாற்றும்போது பதவி நீக்கப்படுகின்றார்கள் என்று கருத்து தொடர்பில் பதிலளித்தவர், ''அவ்வாறில்லை. அவ்வாறு கூறுவது அவரவர் கருத்தும் நிலைப்பாடுமாகும். ஆகவே அதுபற்றி எம்மால் கருத்துக்களை வெளிப்படுத்த முடியாது'' என்றார்.

எதிர்க்கட்சியினர்புரட்சியொன்று அவசியம் என்று கூறுவது பற்றி பதிலளிக்கையில், ''அடுத்த தேர்தலையா கூறுகின்றார்கள்?'' என்று கேள்வி எழுப்பிய மஹிந்த, ''நாம் அடுத்த தேர்தலில் மக்களின் பக்கம் நிற்போம்'' என்றார்.




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவானதாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்பு தேசிய வைத்தியசாலை பிரதானி ஒருவரை தடுப்பூசி மோசடி தொடர்பாகக் கைதுசெய்ய முயற்சி

தடுப்பூசிகள் மோசடி தொடர்பாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதானி ஒருவரை கைது செய்வதற்கான விசாரணைகள்குற்றப்புலனாய்வுதிணைக்கள அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரிடம்ஆலோசனைகள்பெறப்பட்டுள்ளன எனவும் எதிர்வரும் நாள்களில் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதானி அழைக்கப்படவுள்ளார் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

தடுப்பூசி மோசடிகள் தொடர்பில் இது வரையில் 38 பேரிடம் வாக்குமூலம் பெறப் பட்டுள்ளதுடன் நிதி அமைச்சின் செயலாளர் மற்றும்திறைசேரிஅதிகாரிகளிடம்செவ்வாய்க் கிழமை வாக்குமூலம் பதிவு செய்ய குற்றப் புலனாய்வு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தியகடன்உதவித்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் குறித்த தகவல்களைப் பெறுவதற்கு இந்த அதிகாரிகளிடம் வாக்குமூலங்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி வாக்குமூலத்தில் வெளிப்படுத் தப்படுகின்ற உண்மைகளின் அடிப்படையில் குறித்த தடுப்பூசிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின்தலைவர்கள்மற்றும்குறித்த தடுப்பூசிகளை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் நிறுவனங்களின் தலைவர்களிடம் இருந்து வாக்குமூலங்களைப் பெறுமாறு சட்டமா அதிபர் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## நெல்லை உட்கொண்ட காட்டு யானையின் தாக்குதலில் சுவர் இடிந்து இளைஞர் இறப்பு



சிகிரியா கிபிஸ்ஸ பிரதேசத்தில் நண்பர் ஒருவரின் வீட்டில் இளைஞர்கள் குழுவுடன் உறங்கிக் கொண்டிருந்தபோது காட்டு யானை சுவரை சேதப்படுத்தியதில் அது இடிந்து வீழ்ந்து 19 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சீகிரிய கிபிஸ்ஸ பகுதியைச் சேர்ந்த அவிந்த இஷான் சமரநாயக்க என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இவர் சிகிரியா பிரதேசத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி பெறுபவர் என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

நெல்லை உண்ணவந்தகாட்டுயானைஅதனை உட்கொண்டு விட்டு இளைஞர்கள் உறங்கிக் கொண்டிருந்தவீட்டின் சுவரைசேதப்படுத்தியபோதே இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

## குருணாகலில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி 22 மாணவர்களும் 5 ஆசிரியர்களும் காயம்

குருணாகல்-பொயவலான பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியின் பாடசாலை ஒன்றில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகினர் எனப் பொயவலான பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம்செவ்வாய்க் கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த பாடசாலையின் மைதானத்துக்கு அருகிலிருந்த மரத்தில் உள்ள குளவிக் கூடு கலைந்தே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.


சம்பவத்தில் 22 மாணவர்களும் 5 ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டு தம்பதெனிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

இந்த சம்பவத்தையடுத்து குறித்த மரத்தில் உள்ள குளவிக் கூட்டை அகற்றுமாறு வனவிலங்கு அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொயவலான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## முல்லையின் மூத்த தவில் வித்வான் இரா. முருகுப்பிள்ளை காலமானார்

முல்லைத்தீவின் மூத்தகலைஞரும்சிறந்த தவில்வித்துவானுமான இராமுப்பிள்ளைமுருகுப் பிள்ளை நேற்று (புதன் கிழமை) அதிகாலை காலமானார்.



முல்லைத்தீவு முள்ளியவளையை நிரந்தர வதிவிடமாக கொண்டஇவர்,'முல்லைக் கலைக்கோன்', 'கலா பூஷணம்', 'முல்லை பேரொளி' ஆகிய விருதுகளை பெற்ற இசை மேதையாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள்இன்று(வியாழக்கிழமை) காலை 10 மணியளவில் அவரது முள்ளியவளைமுதலாம் வட்டார இல்லத்தில் இடம்பெறவுள்ளது. (05)

## கேரள கஞ்சாவுடன் ஒருவர் மன்னார் பகுதியில் கைது

மன்னார் பேசாலை பகுதியில் கேரள கஞ்சாவுடன் பெண் ஒருவர் செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் பொலிஸ்பிரிவுகுற்றப்புலனாய்வு பிரிவினருடன் இணைந்துமேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது மன்னார் பேசாலை பொலிஸ்பிரிவில் உள்ள ஒரு வீட்டை செவ்வாய்க்கிழமை பேசாலை சோதனையிட்டபோது ஒரு கிலோ 30 கிராம் கேரள கஞ்சாவுடன் ஒரு குடும்பப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண் நீண்ட காலமாக இந்தக் கடத்தலைமேற்கொண்டு வருகிறார் எனவும் தெரிய வந்துள்ளதுடன், கைது செய்யப்பட்ட கஞ்சாவும் சந்தேகநபர் பெண்ணும் மேலதிக விசாரணைகளுக்காக பேசாலைபொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

இந்தப் பெண்ணை சட்ட நடவடிக்கைக்காக நேற்று (புதன்கிழமை) மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராக்குவதற்கானநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பேசாலை பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் இது தொடர்பாக ஒருவர் தேடப்படுவதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்தனர். (05)

## மாவீரர் நினைவேந்தலில் சிறுவர்களை ஈடுபடுத்தியது தொடர்பில் விசாரணை

தமிழீழ விடுதலைப் புலிகள் போன்று ஆடை அணிந்துசயனைட்போன்றவற்றை கழுத்தில்வைத்துநினைவேந்தலில்ஈடுபட 3 சிறுவர்களை பாவித்தமை தொடர்பில் யாழ். மாவட்டத்திற்குப்பொறுப்பானசிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் வீசாந்தவின் உத்தரவின் பேரில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போரில் உயிரிழந்த விடுதலைப் புலி உறுப்பினர்களை நினைவு கூரும் வகையில் கோப்பாயில் உள்ள துயிலும் இல்லத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வுக்காக இந்த மூன்று சிறுவர்களும் அழைத்து வரப்பட்டுள்ளனர். இந்த மூன்று சிறுவர்களின் பெற்றோர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களுக்குஎதிராக சட்டத்தை அமுல்படுத்த பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (05)

## டெங்கால் ஒருவர் சாவு



நாடளாவிய ரீதியில் இதுவரை 75, ஆயிரத்து 712டெங்குநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, செவ்வாய்க்கிழமை டெங்கு நோயால்மேலும்ஓர்உயிரிழப்புபதிவாகியுள்ளதாகவும் டெங்கால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 46 ஆக உயர்வடைந்துள்ளதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (05)

## யாழ்.நோக்கிச் சென்ற பஸ்கள் மீது அநுராதபுரத்தில் கல் வீச்சுத் தாக்கு

கொழும்பில் நடைபெற்ற சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கத்தின் தேசிய மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் யாழ். நோக்கி வந்த பஸ் உள்ளிட்ட மூன்று பஸ்கள் மீது அநுராதபுர பகுதியில் கல் வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அநுராதபுரம் - நொச்சியாகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட , அநுராதபுரம் - புத்தளம் வீதியில் திங்கட்கிழமை இரவு குறித்த தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பில்இருந்துயாழ்ப்பாணம்நோக்கிவந்து கொண்டிருந்த தனியார் பஸ்கள் இரண்டு மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துஎன்பவற்றின்மீதுமோட்டார்சைக்கிள்களில் வந்த இனம் தெரியாத நபர்கள் கல் வீசி தாக்குதல் நடத்தி விட்டு தப்பி சென்றுள்ளனர். தாக்குதலில் பஸ்களின் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன.

சம்பவம் தொடர்பில் பஸ்களின் சாரதிகளால் நொச்சியாகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.(05)

## 200 ஆண்டுகளுக்கு முன்னர் ஒல்லாந்தரினால் சூறையாடப்பட்ட தொல்பொருள்கள் திரும்பின



கடந்த 1756 ஆம் ஆண்டு ஒல்லாந்தரால் கண்டி அரச மாளிகையைத் தாக்கி அங்கிருந்து சூறையாடப்பட்ட 6 தொல்பொருள்கள் நெதர்லாந்தில் இருந்து நேற்று (புதன்கிழமை) காலை மீண்டும் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட தொல்பொருள்களில் கீர்த்தி ஸ்ரீராஜசிங்க மன்னரின் திருமணவாள், மன்னரின்தங்கக்கத்தி, இயந்திர துப்பாக்கி மற்றும் இரண்டு பெரிய துப்பாக்கிகள் உள்ளிட்டவைஅடங்குகின்றன.

இந்த தொல்பொருள்களை நெதர்லாந்தால்இலங்கைக்கு கையளிக்கும் நிகழ்வு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விகவிக்ரமநாயக்க, இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் பொனி ஹோர்பக், புத்த சாசன சமய கலாசார அமைச்சின்செயலாளர்சோமரத்ன விதானபத்திரன, அமைச்சின் மேலதிக செயலாளர் திலக் நந்தன ஹெட்டியாராச்சி, கொழும்பு தேசிய அருங்காட்சியக திணைக்களத்தின் பணிப்பாளர் ஜெனரல் சனுச்சிஜாகஸ்தூரி, தேசிய அருங்காட்சியக கண்காணிப்பாளர் ரஞ்சித் ஹெவகே, இலங்கை வெளிவிவகார அமைச்சின் உதவிச் செயலாளர் ஸ்ரீராஜீவ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த தொல்பொருள்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய கோப்பு, இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவரால் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது. பின்னர் அமைச்சர் அதனை தேசிய அருங்காட்சியக திணைக்களத்தின் பணிப்பாளரிடம் கையளித்தார்.

இந்தத்தொல்பொருள்களைக்கொழும்பு தேசிய அருங்காட்சியகத்திற்கு பலத்த பாதுகாப்புடன் எடுத்துச்செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நெதர்லாந்தில் ஒல்லாந்தரால் சூறையாடப்பட்ட இலங்கையின்தொல்பொருள்கள்பலஇருக்கின்றன எனவும், அவற்றை விரைவில் நாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், இதற்கு மேலதிகமாக இங்கிலாந்து மற்றும் பிற வெளிநாடுகளில் ஏராளமான எமது நாட்டிலிருந்து சூறையாடப்பட்ட தொல்பொருள்கள் உள்ளன எனவும் புத்தசாசன, சமய கலாசார அமைச்சின் மேலதிக செயலாளர் திலக் நந்தன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.11.2023இல் வெளியிடப்பெற்றது.